# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
புரட்டாதி 4
ஷவ்வால் பிறை 16
புதன் (20-9-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 32

விலை சதம் 35


# தார்மீகச் சாமியாரின் முகமூடி கிழிந்தது!

# சன்சோனி ஆணைக்குழு முன்

## பல்கலைக்கழகப் பதிவாளர் கூறிய அதிர்ச்சித் தகவல்!

**ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், அவரது அரசாங்கமும் கூறியபடி பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல்முறை அறவே நீக்கப்படவில்லை; அது இப்போது ஜே. ஆர். ஆட்சியின் கீழும் நீடிக்கவே செய்கிறது—1978ம் ஆண்டிலும் அந்தமுறையே கடைப்பிடிக்கப்பட்டது என்ற தமிழ்மக்களுக்கு அதிர்ச்சிதரும் தகவலை சன்சோனி ஆணைக்குழுமுன் வெளியிட்டிருக்கிறார் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. விஜயரத்தினபண்டார.**

**மொழிவாரித்தரப்படுத்தல் முறையை அரசாங்கம் முற்றாகக் கைவிட்டால், பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதியுடைய பெருந்தொகையான சிங்களமாணவர்கள் மத்தியில் மேலும் அதிருப்தியேற்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.**

முந்திய அரசாங்கம் கொண்டுவந்த தரப்படுத்தல் முறையை முற்றாக அகற்றிவிட்டோம்; தமிழ் மாணவர்களுக்கு நீதி வழங்கிவிட்டோம்; திறமை அடிப்படை ஒன்றிலேயே இனி பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்குவோம்; என்றெல்லாம் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களும், அவரது அமைச்சர்களும் வாயளவில் கூறிவந்தார்களல்லவா? ஆனால் இப்போது அவர்களது முகமூடி கிழிக்கப்பட்டு உண்மையான சுயரூபம் அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

ஜனதிபதி ஜே. ஆரும், ஏனைய அமைச்சர்களும் தரப்படுத்தல் முறையை ஒழித்துவிட்டோம், நீக்கிவிட்டோம் என்று கூறிவந்தபோதிலும், நடைமுறையில் அது இப்போதும் பின்பற்றப்படுகிறது என்கிற உண்மையை சன்சோனி ஆணைக்குழுமுன் பகிரங்கமாக அம்பலப்படுத்தியிருக்கிறார் இலங்கைப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. விஜயரத்தின பண்டார.

பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறையும் மாவட்ட அடிப்படை முறையும் ஒழிக்கப்படும் என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஏற்கெனவே கூறியிருந்தபோதிலும், தரப்படுத்தல்முறை இப்போதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது; 1978ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதியிற்கூட தரப்படுத்தல் முறையும் மாவட்ட அடிப்படை முறையும் கடைப்பிடிக்கப்பட்டன என்று திரு. பண்டார கூறியுள்ளார்.

தரப்படுத்தல் நீக்கப்பட்டுவிட்டதாக கல்விமந்திரி திரு. நிசங்கா விஜயரத்தின கூறியதைத் தாம் மறுப்பதாகவும் தரப்படுத்தல் முறை நீக்கப்படவில்லை

—4-ம் பக்கம் பார்க்க

## "இலங்கையில் சிங்களவர்களிலும் பார்க்க தமிழர்களே தொன்மையானவர்கள்"
### —ஸ்டேட்ஸ்மன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 17 பா. உ. க்கள் இலங்கையின் ஆதிக்கத்தை தமது கையில் வைத்திருக்கும் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் முன்பிருந்தே தீவில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் 15 இலட்சம் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். (17 TULF M.P.s who represent about 1.5 million Tamils who have been in the island for centuries, probably longer even than the dominant majoriry Sinhalese community.)

—இவ்வாறு இந்தியப்பத்திரிகையான "த ஸ்டேட்ஸ்மன்" (The Statesman) 11.9.78 இதழில் குறிப்பிட்டுள்ளது.

## அதிகாரமின்றி வீடுகளில் புகுந்து பொலிசார் சோதனை

சட்டத்தின் ஆட்சியையும் (Rule of Law) குடிமக்களின் சுதந்திரத்தையும்புதிய அரசியல் சட்டம் பாதுகாப்பதாக கூறப்பட்டபோதிலும், பொலிசாரின் சட்டவிரோத வேட்டைகள் தமிழ் ஈழ மக்களின் மீது தொடர்ந்து நடைபெற்ற வண்ணமேயிருந்து வருகிறது.

முந்திய ஆட்சியின் கீழ் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ்மக்கள் எவ்வாறு பொலிசாரால் துன்புறுத்தப்பட்டார்களோ, அதேபோல சாதாரண சட்டத்தின் கீழ் இன்றைய ஆட்சியிலும் தமிழ்மக்கள் பொலிசாரின் தொல்லைகளுக்குஉட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

ஒருவரது வீட்டைச் சோதனையிடுவதென்றால்

—4-ம் பக்கம் பார்க்க

## கட்டாய சிங்களமே நீதியமைச்சரின் முதலாவது கட்டளை

புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததும் நீதியமைச்சர் திரு. தேவநாயகம் விடுத்துள்ள முதலாவது கட்டளை என்ன தெரியுமா? எங்காவது தமிழைப் பயன்படுத்துமாறு அவர் கட்டளையிட்டிருப்பதாக கருதுவீர்களாயின், நீங்கள் ஏமாந்தீர்கள்!

நீதியமைச்சர் விடுத்துள்ள முதலாவதுகட்டளை, தமிழ்

—4-ம் பக்கம் பார்க்க

## காசி, மாவை சார்பில் தலைவர் சிவா ஆஜரானர்

மட்டக்களப்பில் அரசியலமைப்பு எதிர்ப்பு துண்டுப் பிரசுரங்களை வழங்கியதற்காக 6.9.78ல் கைது செய்யப்பட்டு 15.9.78 வரை விளக்க மறியலில் வைக்கப்பட்ட கவிஞர்காசி ஆனந்தன், மாவை சேனதிராசா மற்றும் 11 இளைஞர்களும் 15-9-78 வெள்ளியன்று கைவிலங்கு பூட்டப்பட்டு மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டபோது, அவர்கள் சார்பில் சிரேட்ட சட்டத்தரணியாக திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் மட்டக்களப்பு நீதிமன்றத்தில்ஆஜராகி இவர்களைப் பிணையில் விடுமாறு வாதாடினர். பெருந்திரளானமக்கள் உணர்ச்சி கொப்பளிக்க நீதிமன்றத்தில் கூடியிருந்தனர். சிவாவின் சிம்ம கர்ச்சனை— சட்டவாதம் — நீதிமன்றக் கட்டடத்தையேஅதிரவைத்தது. பிணை பற்றிய தீர்ப்பு 18-9-78ல் நீதவானல் வெளியிடப்படும்.

## எங்கும் ஒரே பரபரப்பு

- எங்கும் இது பற்றியே பேச்சு!
- பத்திரிகை உலகில் பெரும் புரட்சி!

### "த சன்சோனிக் கோமிஷன் எவிடென்ஸ்"

(ஆங்கில வார இதழ்)

ஒவ்வொரு சனிக்கிழமையும் எங்கும் கிடைக்கிறது. விலை தனிப் பிரதி ருபா ஒன்று.

● 100 வீதம் பாடசாலைகளை பகிஷ்கரித்தனர்!

## கல்வியமைச்சு செயலாளர் ஒப்புக்கொண்ட உண்மை

செப்டம்பர் ஏழாந் திகதி அரசியலமைப்பை எதிர்த்து தமிழ் ஈழத்தில் நடைபெற்ற பாடசாலை பகிஷ்கரிப்பில் 100வீதமான மாணவர்கள் பங்கு பற்றியதை கல்வியமைச்சின் செயலாளரே மறைமுகமாக ஒப்புக் கொண்டுள்ளார்.

கல்வியமைச்சின் செயலாளர் திரு. டி. எம். பி. பி. தலநாயகா 15-9-78 தமிழ் நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில், வடக்கு கிழக்கு [illegible] பாடசாலைகளுக்கு செப்டம்பர் 7ம் திகதி ஆக 10 சதவீதமான மாணவர்களே சமூகம் கொடுத்திருந்ததாக தெரிவித்துள்ளார்.

சமூகம் கொடுத்த இந்தப் பத்துசதவீதமாணவர்களும் சிங்கள மாணவர்களாக கணக்கிட்டால் நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் மாணவர்கள் பாடசாலைகளை பகிஷ்கரித்திருக்கிறார்கள் என்ற உண்மையை கல்வியமைச்சின் செயலாளரே மறைமுகமாக ஒப்புக்கொண்டு விட்டார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# "சிங்களம் மட்டுமே தெரிந்தவன் இங்கு கஷ்டமின்றி வாழமுடியும்!"

## ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பெருமிதம்!

அண்மையில் இலங்கையின் இரு தேசிய மொழிகளான - தமிழுக்கும் சிங்களத்துக்கும் — அதாவது இந்த இரு மொழிகளிலும் 1976—1977ம் ஆண்டில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கு — பரிசளிக்கும் சாகித்தியதின விழா அரசாங்கத்தினால் அம்பலாங்கொடை மாதம்பை மாவித்தியாலயத்தில் அரசாங்க செலவில் நடத்தப்பட்டது. இந்த விழாவில் தானே முழு நாட்டுக்கும் ஜனாதிபதியென்று கூறிக்கொள்ளும் ஜே. ஆர். ஜெயவர்த்தன பங்குபற்றி உரையாற்றினார்.

எல்லா மொழிகளையும், இனங்களையும் பாரபட்சமின்றி சம நோக்குடன் தாம் நடத்துவதாக கூறும் ஜே. ஆர். அந்த விழாவில் நிகழ்த்திய உரை 12-9-78 சிலோன் டெயிலிநியூஸ் ஏட்டில் வெளிவந்துள்ளது. அந்தப்பேச்சை இங்கு அப்படியே தருகிறோம். இதில் அவர்தாம் ஒரு சிங்களவர் என்ற உணர்வுடன், சிங்கள இனப்பெருமிதத்துடன் பேசியிருக்கிறாரா அல்லது, இரு இனங்களுக்கும் தாம் பொதுவானவர் என்ற உணர்வுடன் பேசியிருக்கிறாரா என்பது, அவரது பேச்சைப்படிப்போருக்கு விளங்கும். இதோ அவரதுபேச்சு:-

"சிங்கள நாட்டினமும், சிங்களமொழியும் கலாச்சாரமும், மதமும் காலத்தின் தாக்குதலை எதிர்த்து நின்று பிடித்துள்ளன. ஆரியசிங்கள இலக்கியத்தையும் கலாச்சாரத்தையும் வளர்க்கவும், அவை மீண்டும் மறுமலர்ச்சியடையவும், பூரண சுதந்திரமும் அரசாங்க நிதிஉதவியும் தாராளமாக வழங்கப்படும்.

இன்று கிரேக்கமும், லத்தினும் வழக்கில் இல்லை. ஆயினும் 2500 வருடங்களுக்கு முந்திய உலகின் பழைய மொழியான சிங்களம் இன்றும் பேசப்படுகிறது.

சிங்கள இலக்கியம், விஜயனின் ஆட்சிக்காலத்திலிருந்து அனுராதபுரக்காலம், தம்பதெனியாக்காலம், கோட்டைக்காலம், போன்ற பல காலங்களைக் கண்டிருக்கிறது. இன்று துரதிருஷ்டவசமாக கொழும்புக் காலமாக அமைந்துள்ளது. இது மிக விரைவில்மாற்றியமைக்கப்படவேண்டும்,

"நானும், காலஞ்சென்ற டட்லி சேனநாயகாவும் அரசியலில் இறங்கியபோது, நாட்டின் சுதந்திரத்தை மீட்பதன் மூலம், சிங்கள மொழியைப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்ந்தோம். இதனால்தான் 1943ம் ஆண்டு சட்டசபைக்கு நான்சென்றபோது, சிங்களத்தை தேசிய மொழியாக்க வேண்டுமென்று பிரேரணைகொண்டு வந்தேன்.

"எங்கள் மதமும் வெளிநாட்டிலிருந்தே இங்கு வந்தது. நாங்களும் இந்தியாவிலிருந்தே இங்குவந்தோம்.

"சிங்கள மொழிமட்டுமே தெரிந்த ஒருவன் இன்று இந்நாட்டில் வாழ்வதற்கு எந்த விதகஷ்டமும் படத் தேவையில்லை. ஆயினும் நாம் உலகில் தனித்து ஒதுங்கிவிடாமல் நவீன உலகின் ஆரோக்கியமான காற்று நம்நாட்டுக்குள் நுழைய நமது ஜன்னல்களைத் திறந்துவைப்போம்."

—இவ்வாறு அதிஉத்தமரான ஜே. ஆர். கூறியிருக்கிறார்.

பாரபட்சமற்று எல்லா இன மக்களையும், எல்லா மொழிகளையும் சமமாக பார்ப்பதாக கூறும் தார்மீகச் சாமியாரின் வாயிலிருந்து விழுந்த மேற்கண்ட பேச்சில் சிங்களம், சிங்களவர், சிங்கள தேசியம் என்ற உணர்வே நிறைந்துநிற்கிறதே தவிர—இந்நாட்டின் மற்றோர் தேசியமொழியான தமிழைப்பற்றி மருந்துக்குத்தானும் அவர் உச்சரித்திருக்கிறாரா?

# "சுதந்திர வேட்கைக்கு முன் சலுகைகள் வெறும் தூசு!"

## ஆனைக்கோட்டையில் சுதந்திரன் ஆசிரியர் பேச்சு!

"கனடாவில் குவிபெக் மாகாணத்தில் வாழும் பிரெஞ்சு மக்களுக்கு ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. பிரெஞ்சுமொழிக்கு ஆங்கில மொழியுடன் எல்லாத்துறையிலும் சமத்துவம் வழங்கப்பட்டுள்ளது. என்றாலும்கூட, அந்தமக்கள் ஏனைய கனடாவிலிருந்து பிரிந்து சென்று பிரெஞ்சு மக்களுக்கென ஒரு தனி அரசை குவிபெக் மாகாணத்தில் நிறுவியே தீரவேண்டுமென்று சுதந்திர உணர்வுடன் போராடுகிறார்கள். இத்தனைக்கும் குவிபெக் மாகாணத்துக்கென தனியானவரலாறோ முன்பு தனித்து ஆட்சிபுரிந்த சரித்திரமோ இல்லை! அப்படியிருந்தும் அவர்கள் சுதந்திரத்துக்காகப்போராடுகிறார்கள்

ஆனால்இங்கோ—தமிழ்ஈழ மக்களாகிய நமக்கு—நமது பிரதேசங்களுக்கு—சுயாட்சி கூடத்தரப்படவில்லை; தமிழ் மொழிக்கு சமஉரிமை வழங்கப்படவில்லை; தமிழ் ஈழத்தில் திட்டமிட்ட சட்டவிரோத சிங்களக்குடியேற்றம் தடுக்கப்படவில்லை. வெறும் கண்துடைப்புக்காக அற்பத்தமான சலுகைகளே புதிய அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ளன; இந்தச் சலுகைகளால் சுதந்திரம் வேண்டிப்போராடும் தமிழ் இனமக்களைத் திசை திருப்பி விடமுடியாது நமது தமிழ் ஈழம் தனித்து இயங்கிய வரலாறு நமக்குண்டு; தனியான மொழி, கலை, கலாச்சாரம், நாடு, பொருளாதார அமைப்பு நமக்குண்டு. எனவே சலுகைகளில் மயங்காது, எமது தமிழ் ஈழநாட்டின் சுதந்திரத்துக்காக உறுதியுடன் போராடுவோம்!' நமது விடுதலைப்போராட்டத்தை உலக அரங்கில் முன்னெடுத்துச் செல்வோம்! உலகின் பார்வை நம்மீது விழக்கூடிய அளவுக்கு நமது போராட்டங்களை நடத்துவோம்!"

—இவ்வாறு ஆனைக்கோட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைத்தலைவரின் இல்லத்தில் நடைபெற்றகருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார். இக்கருத்தரங்கு 2-9-78சனிக்கிழமை நடைபெற்றது. இக்கருத்தரங்குக்கு ஆனைக்கோட்டை கிளைத்தலைவர் திரு. சி. ஆறுமுகம் தலைமை வகித்தார்.

இக்கருத்தரங்கில், திரு. ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழ் மக்கள்" தமது உண்மையான வரலாற்றை படித்து உணர வேண்டும். நாம் இந்த நாட்டில் வந்தேறு குடிகள் அல்ல; சிங்களவர்களின் மூதாதை விஜயன் இங்கு வந்துசேரு முன்பே இங்கு தலைநிமிர்ந்து அரசோச்சி வாழ்ந்த இனம் நமது இனம். இதை சிங்கள வரலாற்றாசிரியர்களான சேர்.போல்.பீரிஸ் போன்ற வரலாற்றாசிரியர்களே கூறி வைத்திருக்கிறார்கள். இன்று இந்த வரலாற்றுகளையெல்லாம் திரித்து இலங்கை முழுவதுமே சிங்களவர்களுக்குரியது என்று காட்டுவதற்கு முயற்சி நடக்கிறது. இதை நாம் முறியடித்து, நமது வரலாற்றை நிலைநாட்ட வேண்டும்.

புதிய அரசியல் சட்டத்தில் சிலமொழிச்சலுகைகளை அரசாங்கம் தந்திருப்பதாக திரு. தேவநாயகம் கூறி தமிழ் மக்களை விடுதலைப் பாதையிலிருந்து திசை திருப்ப முயற்சிக்கிறார்; ஆனால் கிழக்கு மாகாணத்தை முற்றுகவிழுங்குவதற்கு சிங்களவர்களின் மதுறுஓயா த்திட்டம் வாயைப் பிளந்து, கொண்டுவருகிறது.

நாம் கோருவது சலுகைகள் அல்ல; சலுகைகள் யாசித்துப் பெறுவது; உரிமைகள் கோரிப்பெறுவது; இந்த இரண்டு நிலையிலும் நாம் இன்று இல்லை; இன்று நமது நாட்டின் சுதந்திரத்தை நிலைநாட்டும் பணியிலேயே ஈடுபட்டிருக்கிறோம். தியாகத்தின் மூலமும், உறுதியின் மூலமும் நமது விடுதலையை நாம் மீட்டே தீருவோம்."

# ஊர்தோறும் பறந்தன உதயசூரியன் கொடிகள்!

### கோப்பாயில்

கோப்பாய்த் தொகுதியிலுள்ள சிறுப்பிட்டியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளை அலுவலகத்தில் கூட்டணித்தலைவர் திரு. சிவசிதம்பரம் தமிழ்ஈழக் கொடியை 7-9-78 காலை 8மணிக்கு ஏற்றிவைத்தார். தமிழ் ஈழத் தேசிய கீதம் பாடப்பட்டதுடன், தொண்டர் அணிவகுத்துவந்து தாயின்மணிக் கொடிக்கு மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் கோப்பாய்த் தொகுதி கூட்டணிக் கிளைப்பிரமுகர்கள் பங்குபற்றினர்.

### உடுப்பிட்டித் தொகுதியில்

உடுப்பிட்டித்தொகுதியில் கரவெட்டி கிழவித்தோட்ட பிள்ளையார் கோவிலடியில் உடுப்பிட்டிப் பா.உ. திரு. த. இராசலிங்கம் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். அண்மையில்ஏற்பட்ட பயங்கர விபத்தொன்றில் சிக்கிய அவரது மூன்று பிள்ளைகளும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நேரத்திலும், கடமைதவறாது கூட்டணியின்தீர்மானப்படி திரு. இராசலிங்கம் அவர்கள் தமிழர் கொடியை ஏற்றினைத்தது குறிப்பிடத்தக்கது. உடுப்பிட்டித் தொகுதியில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து தமிழினத்தின் உறுதியைஉலகறியச் செய்த பாடசாலை மாணவர்களுக்கும் திரு. இராசலிங்கம் நன்றிதெரிவித்தார். பருத்தித்துறை பா.உ. திரு. க. துரைரத்தினம். உடுப்பிட்டி கிளை செயலாளர் திரு. க இளையதம்பி ஆகியோரும் உரையாற்றினர்.

### பருத்தித்துறையில்

பருத்தித்துறையில் பல இடங்களில் கறுப்புக் கொடிகளை உயர்த்தி புதிய அரசியலமைப்புக்கு தமிழ்மக்கள் தமது பலமான எதிர்ப்பைத் தெரிவித்தனர். தென்னிலங்கைக்கு பயந்துதூக்கி ஓடும் மரதன் ஓட்டம் ஆரம்பமான பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குமுன்பாகவும் பென்னம்பெரிய கறுப்புக்கொடி, பறக்கவிடப் பட்டிருந்தது. பாடசாலைகள் அனைத்தும் நாலுவீதம் பகிஷ்கரிக்கப் பட்டன. மந்திகை கண்ணகை அம்மன் கோவிலடியில் பருத்தித்துறை பா.உ. திரு. க. துரைரத்தினம் தமிழ் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். கூழிபுரம் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர் திரு. கே. மகேஸ்வரன் தமிழீழத் தேசியகீதம் பாடினார்.

### மானிப்பாயில்

மானிப்பாய்த் தொகுதியிலும், காங்கேசன்துறைத் தொகுதியிலும், மானிப்பாய் பா.உ. திரு. வி. தர்மலிங்கம் தமிழீழத் தேசியக் கொடிகளை ஏற்றிவைத்தார்.

காங்கேசன்துறைத் தொகுதியில் நான்கு இடங்களில் உதயசூரியன் கொடி ஏற்றப்பட்டன. தெல்லிப்பளை த.வி. கூட்டணிப் பணிமனை, ஆளவெட்டிகேணிக் கரைவயிரவர்கோவிலடி, கட்டுவன் தெற்குயாரதி வாசிகசாலை, மாதகல் கேபல்திரியான் கோவிலுக்கு அருகாமையிலும் தமிழ்தேசியக் கொடிகள் தமிழ்தேசிய கீதத்துடன் ஏற்றிவைக்கப் பட்டன.

### ஏழாலையில்

ஏழாலை உதயசூரியன் அறிவகத்திலும் மானிப்பாய் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் 7-9-78 காலை, பெருந்திரளான மக்கள் முன்னிலை தமிழ் ஈழத் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

### கல்முனையில்,

கல்முனை த.வி.கூ. கிளை அலுகை முன்றலில் செப்டம்பர் 7-ம் திகதி காலை தமிழ் ஈழத் தேசியக் கொடியை கூட்டணியின் மத்திய செயற்குழு உறுப்பினரான திரு. பொ. வி. கந்தையா ஏற்றிவைத்தார். இதைத் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில் கூட்டணித்தலைவர் டாக்டர் ஆ. உதுமாலெப்பை, ஆ. வேல்முருகு, கு. ஏகாம்பரம், ஜனாப் பலூலுன், செல்லையா, பொ. வி. கந்தையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

### முல்லைத் தீவில்

செப்டம்பர் 7ம் திகதி புதிய அரசியலமைப்பு எதிர்ப்பு போராட்டத்தின் ஓர் அங்கமாக முல்லைத்தீவில் முல்லைத்தீவு பா.உ. திரு. சே. மா. செல்லத்தம்பு உதயசூரியன் கொடியை தமிழ் தேசிய கீதத்துடன் ஏற்றிவைத்தார். இவ்வைபவத்தில் முல்லைத்தீவுத் தொகுதி கூட்டணிக் கிளையினரும், ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெரிய பாடசாலைகளான முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முள்ளியவளைவித்தியானந்தாக் கல்லூரி, புதுக்குடியிருப்பு மாவித்தியாலயம், ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயம் ஆகியவை உட்பட சகல பாடசாலைகளிலும் மாணவர்கள் பகிஷ்கரித்தனர்.

### முருங்கனில் கறுப்புக்கொடி

புதிய அரசியலமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து முருங்கனில் பல இடங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. பாடசாலைச் சுவர்களிலும் பகிஷ்கரிப்பு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இவற்றை றக் கிழிப்பதில் பொலிசார் ஈடுபட்டிருந்தனர். வவுனியா — கொழும்பு வீதியில் [illegible] கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகதிகளுக்கு சேவை செய்வதன் மூலமே சைவ சமயத்தைப் பாதுகாக்க முடியும்!"

## சிவபாத சுந்தரனார் நூற்றாண்டு விழாவில் பேராசிரியர் சின்னத்தம்பி பேச்சு!

அண்மையில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மண்டபத்தில் சைவப்பெரியார் அ. சிவபாதசுந்தரனார் அவர்களின் நூற்றாண்டு விழா பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் போது நூற்றாண்டுவிழா மலரைவெளியிட்டு வைத்து மருத்துவப் பேராசிரியர் திரு. அ. சின்னத்தம்பி உரைநிகழ்த்தினார். அப்போது அவர்சைவ சமயப் பெரியார்கள் அகதிகளுக்கு சேவை செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவர்கூறியதாவது;—

அண்மைக்கால கலவரத்தின்பின் தமிழ் மொழிக்கு வந்த இடர்களையும் சைவ சமயம் சிங்கள நாடுகளில் இன்று உறும் இடர்களையும் அனுபவித்துக்கொண்டு தமிழ் சைவ மக்கள் குடிபெயர்ந்துதமிழ்ப்பிரதேசங்களை அடைந்தார்கள்.

இப்போ தமிழ் மக்களை வாட்டும் இடர்கள் பல. தென் இலங்கையில் புத்த சமயத்தினரால் சைவக் கோவில்கள் பலசேதப்படுத்தப்பட்டன. குடிபெயர்ந்த மக்களுக்கு வழிபாட்டுக் கோவில்கள் இல்லை. சமய அறிவு புகட்டுவதற்கு சிறு மடங்களாயினும் இல்லை. சிறுபிள்ளைகளுக்கு கல்வியும் சமய அறிவும் புகட்டப் பள்ளிக்கூடங்கள் இல்லை. பட்டினியாலும் குறை உணவாலும் வருந்தும் சிறார்களுக்கு அன்னம், பால் வழங்கும் போதிய சாலைகள் இல்லை.

குடிபெயர்ந்த குடும்பங்கள் உணவுக் குறைபாடு, உடைக்குறைபாடு முதலியவற்றால் வருந்துகிறார்கள். கல்வி கற்றலே இல்லை. நான் அண்மையில் பார்வையிட்ட ஒரு குடியிருப்பில் 100குடும்பங்கள் வரை அடங்கி இருக்கிறார்கள். ஒரு கருங்கல்லை வைத்து நீற்றுக்குறிகள் இட்டு வழிபடுகின்றனர். வழிபாட்டுக்கு சிறு கொட்டில்கள் ஆயினும் இல்லை. அப்பிரதேசத்தில் இவற்றை சீர்படுத்தவும் ஆதரவு அளிக்கவும் சமயபாதுகாப்புச் சங்கங்களும் இல்லை.

செல்வந்தர் உள்ள யாழ்ப்பாணக்குடா நாட்டிலுள்ள சைவம் வளர்க்கும் சபைகளும் சைவக்கல்வி வளர்க்கும் சபைகளும் சிறியகொட்டில் கோவில்களை நிறுவுவதற்கும் மண்ணாற் கட்டிய சிறிய பள்ளிக்கூடங்கள் நிறுவுவதற்கும் ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. எடுக்க யோசித்திருக்கிறார்களோ தெரியாது.

இவ்விதமான ஒரு சூழ்நிலையில் சிவபாதசுந்தரனார் செய்த தீரச்செயலை பெரியோர்களாகிய உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இது அவருடன் இணைந்து சைவத்தொண்டு ஆற்றிய சைவப்பெரியார் மயில்வாகனம் அவர்கள் எனக்குச் சொன்ன செய்தியாகும். நெடுந்தீவில் 11 சிறார்கள் மதமாற்றம் அடைந்த செய்தி பெரியார் சிவபாதசுந்தரனாரின் காதுக்கு எட்டியவுடன் 100 ரூபாவும் வழிச்செலவுக்குக்கொடுத்து சிலசைவநண்பர்களை நெடுந்தீவு சென்று விசாரிக்கும்படி உடனடியாக அனுப்பிவைத்தார். இவர்கள் நடாத்திய கிளர்ச்சியினாலும் மக்களுக்குச் செய்த பிரச்சாரத்தினாலும் மதமாற்றம் நிறுத்தப்பட்டது. ஒரு புதுப்பள்ளிக்கூடமும் உருவாகியது.

வவுனியாப் பகுதியில் சைவ அகதிகள் உறும் இவ்வகையான குறைபாடுகளுக்கு யார்தான் உடனடிப் பாதுகாப்புத் தீர்வு அளிக்கப் போகிறார்களோ தெரியாது.

இச்சபையில் இருக்கும் சைவத்தலைவர்களுக்கு கூற விரும்புகிறேன். ஆயிரம் வீரச்செயல்கள் பேசுவதிலும் பார்க்க ஒரு சிறிய தீரச் செயலே சிறந்ததாகும். வடமேற்கு மாகாணத்தில் அக்காலத்தில் சிலாபப் பகுதியில் முன்னேஸ்வர நாதனுக்குப் பல கோவில் பணிகள் செய்ய 64 சைவக் கிராமங்கள் மட்டில் இருந்தன. இந்தத் தேவஸ்தானமும் இச்சைவக்கிராமங்களில் சைவ அறிவைப் பரப்பத் தவறிவிட்டன இதனால் 6—8 சைவக்கிராமங்களே தற்பொழுது காணப்படுகின்றன. இவற்றை நாம் ஓரளவு பாதுகாத்தோம். இதேநிலை சைவ அகதிகளுக்கும்எதிர்நோக்கியிருக்கின்றது — இவர்களைப் பாதுகாக்கத்தவறின் இவர்களையும் இழக்க நேரிடும்.

ஆகவே இவ்வித குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு பெரியார் சிவபாத சுந்தரம் பெயருடைய மடங்கள் போல் அதாவது அவர் வசித்த கொட்டில் போல ஒட்டுசுட்டான், செட்டிக்குளம் போன்ற இடங்களில் வருவாக வேண்டும். இவற்றின் மூலம் தியாக மனப்பான்மையுடைய சைவப் பெரியார்கள், ஓய்வு பெற்ற சைவ ஆசிரியர்கள் சைவ சமய பாதுகாப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்படவேண்டும். பள்ளிக்கூடங்களும் சிறுவர் இல்லங்களும் கதி அற்ற பெண்களுக்கும் ஆதரவு அற்ற பெண்களுக்கும் கோவில்களை அடுத்து சீர்திருத்தத் தொண்டுகளில் ஈடுபடக்கூடியதாக திலகவதியார், மங்கையற்கரசியார்; வீரமகாதேவி பெயர்கள் கொண்ட இல்லங்கள் நிறுவவேண்டும். சிவபாதசுந்தரம் அவர்கள் போன்று விழிப்புணர்ச்சியுடனும் வீரதீரத்துடனும் செயலாற்றுங்கள் நிச்சயம் வெற்றி உங்கள் உடையதே.

---

## இதுதானும் தார்மீகம் புரிகிறதா தமிழா?

"பௌத்தமதத்துக்கு அரசியலமைப்பில் முதன் முதலாக முதன்மை இடத்தை அளித்ததுமட்டுமன்றி அதற்குமேலும் சென்று புத்தசாசனத்தை பாதுகாக்கின்ற பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருப்பதைக் காணும்போது, பௌத்த காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் மகிழ்ச்சியில் மூழ்கிப்போகிறேன். புத்தசாசனத்துக்கு சட்டரீதியான பாதுகாப்பை தார்மீகவாதியான ஜே. ஆர். ஜெயவர்த்தன இப்போது உறுதிசெய்துள்ளார்."

மேற்கண்டவாறு புதிய அரசியலமைப்புக்கு வரவேற்பு தெரிவித்திருக்கிறார் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் சேர். செனரத் குணவர்த்தன!

பொதுமக்களின் வரிப்பணத்தில் பௌத்தமதத்துக்கு மட்டும் இவ்வாறு மேன்மையளித்து, அதே மேன்மையை இந்நாட்டின் ஏனைய இந்து, இஸ்லாமிய கிறித்தவ மதங்களுக்கு அளிக்கத்தவறிய ஜே.ஆரின் அரசியலமைப்புத்தான், சகல இன மத மக்களுக்கும் பாரபட்சமின்றி இயங்கப் போகிறதாம். பாரபட்சமான முறையில் எழுதப்பட்டிருக்கும் அரசியலமைப்பு பாரபட்சமற்று எப்படி எல்லா மதங்களுக்கும் நீதி செய்யும்!

பௌத்தத்துக்கு ஒரு நியாயம்—ஏனைய மதங்களுக்கு வேறுநியாயம்— இதுதானும் தார்மீகம் புரிகிறதா தமிழா?

---

## ஒட்டுசுட்டானில் பாடசாலை பகிஷ்கரிப்பு

தமிழர்விடுதலைக்கூட்டணியின் பாடசாலை பகிஸ்கரிப்பு நடவடிக்கை காரணமாக ஒட்டுசுட்டான் தமிழ் மகாவித்தியாலயம் சென்ற 7ம்8ம் திகதியாகிய இரண்டு நாட்களும் வெறிச்சோடி காட்சியளித்தன. ஒட்டுசுட்டான் சந்தியில் தன்மானத் தமிழ் இளைஞர் சிலர் சிங்கள ஆட்சியின் அரசியலமைப்பை எதிர்த்துக் கருங்கொடிகளை கட்டியதுடன் தமிழர்கொடியான உதய சூரியன்கொடியையும்பறக்க விட்டிருந்தனர்.

7ம் திகதி பின்னேரம் வரை பறந்த இக் கொடிகளை காலையில் வந்தஇரண்டு மூன்று இராணுவவீரர்களும் பொலிசாரும்பார்த்துச் சென்றனர். அவர்களின் கைகளில் அவை அகப்படவில்லை. பின்னேரம் ஜீப்பில் சில இராணுவவீரர்கள் வந்து இப்பகுதிக்கிராம சேவகரின் உதவியுடன் ஒருவரை ஏற்றி அறுத்தனர். அதை அறுக்க ஏறியவரும் ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. அறுந்து விழுந்த அந்தத் தமிழீழத் தேசியக்கொடியைப் பார்த்த அந்த இராணுவவீரன் பல தமிழர் முன்னிலையில் அதைக்காலால் மிதித்துவிட்டு பின்கையில் எடுத்துச் சென்றான்.

ஒட்டுசுட்டான் கிராமத்துக்கு அருகாமையில் உள்ள மாவீரன் பண்டாரவன்னியன் கற்சிலை அமைந்துள்ள இடமான கற்சிலைமடு கிராமத்தில் தன்மானத் தமிழர் பூரணகடை அடைப்பு செய்து எதிர்ப்பு இயக்கத்தை முழுமையாக நிறைவேற்றினர். மொத்தத்தில் இப்பகுதி பகிஸ்கரிப்பு பூரணவெற்றியை அளித்தது.

---

## உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கம் உண்மைக்கே வெற்றி

உடுப்பிட்டி ப. நோ. கூட்டுறவுச்சங்கத்தில் பல காலமாக இருந்து வந்த சீர்கேடுகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கத்தின் சிபார்சில் தெரிவு செய்யப்பட்ட 9 இயக்குனர்களின் விடாமுயற்சியினால் சங்கம் முன்னேற்றமடைந்து வருவதைப் பொறுக்கமுடியாத சில புல்லுருவிகள் தங்கள் பழையகால ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டு விடுமென அஞ்சுகின்றனர். இதனால் மேற்படி சங்கத்தை குட்டிச் சுவராக்கிய முன்னாள் இயக்குனர்களில் சிலர் கீழ்த்தரமான செய்கைகளிலும் ஈடுபடுவதாக அறியப்படுகின்றது.

சில மணிநேரக்கால காளான் பத்திரிகைகளிலும், சுடுநாடு தினசரியிலும் நிறைமைக்கும் நேர்மைக்கும் பேர்பெற்ற பழம்பெரும் கூட்டுறவாளரான திரு. பொ... பிள்ளை ஜே. பி. அவர்களை மாசுபடுத்த எடுத்த முயற்சி படுதோல்வியில் முடிந்துள்ளது. இந்த முயற்சியில் அப்பாவி தொழிலாளர் சிலர் ஏமாந்து தமது வேதனத்தில் ஒரு பகுதியை இப்புல்லுருவிகளுக்கு தானம் செய்ததாகவும் அறியப்படுகிறது. சில அரசாங்க பெரும்புள்ளிகளும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனரா என்று கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. சில உயர் அதிகாரிகளின் நிலையற்ற போக்கால் இராஜினாமாச் செய்ய முனைந்த சங்கத்தின் தலைவர் அவர்களை சங்கத்தின் தொழிலாளர்களும் பொதுமக்களும் வற்புறுத்தியதின் பேரிலும் உடுப்பிட்டி பா. உ. திரு. த. இராசலிங்கம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் மீண்டும் தலைமைப் பதவியை ஏற்ற செய்தி ஊழல் பேர்வழிகளை ஒதுங்கச் செய்துள்ளது.

[illegible] வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்ற சுற்று நிருபத்தை அமுல் படுத்த முனைந்த கூட்டுறவு உதவி ஆணையாளரால் ஏற்பட்ட ஒரு பிரச்சினையை த. வி. கூட்டணிக்கு எதிராகத் திருப்பிவிட எடுத்த முயற்சி படுதோல்வியில் முடிந்தது. முன்னைய ஊழல்காரரை நம்பிய இத்தொழிலாளரில் சிலர் தற்போதைய நிர்வாகத்தினரிடம் தாங்கள் ஏமாற்றப்பட்ட முறைகளை மிகவும் மனவருத்தத்துடன் எடுத்துக்கூறினர்.

தற்போதுள்ள இயக்குனர் சபை பின்தங்கி ஆலை நிர்மாணிக்கும் வேலையிலும் மற்றும் சில அபிவிருத்தி வேலைகளை அமுல்படுத்தி தொழிலாளரையும் சங்கத்தையும் மேல்நிலை அடையச் செய்ய வேண்டுமென்பதற்காக தீவிரமாக இறங்கி உள்ளதைக் கவனித்த தொழிலாளரும் பொதுமக்களும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

---

## முஸ்லிம்களும் சிங்களவர்களாம்

"முஸ்லிம்கள் தமிழ் படித்த சிங்களவர்கள். முஸ்லிம்களுக்கு சிங்களவர்களே பெண்கொடுத்து கிழக்கு மாகாணத்தில் குடியிருக்க நிலமும் கொடுத்தவர்கள் சிங்களப்பகுதியில் வாழும் முஸ்லிம்களின் பெயர்கள் 'முதியான் சலாகே ஹமீத்' என்று இருப்பதைப்பார்த்தால், முஸ்லிம்களும் சிங்களவர்கள்தான் என்பது விளங்குகிறது"

இவ்வாறு காணி அமைச்சர் ஈ. எல். சேனநாயகா அண்மையில் சம்மாந்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் திருவாய் மலர்ந்தருளினாராம். அமைச்சரின் இக்கூற்றை அக்கூட்டத்தில் கலந்துகொண்ட முஸ்லிம் பா. உ.க்களும் கேட்டுக்கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவதிப்பட்டனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியை எதிர்த்து இந்தியாவின் அரசியல் சட்டத்துக்கு தீயிடுவோம்!

## திமுக தலைவர் கருணாநிதி சூளுரை!

"இந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம்" என்று தி.மு.கழகம், நான்கைந்து ஆண்டுகளுக்கு முன் திருச்சி மாவட்டமாநாட்டில் தீர்மானம்மேற்கொண்டிருந்தது. ஆனால் அரசியல் சட்டம் திருத்தப்படும் போது நம்முடைய அந்தத் தீர்மானத்தில் ஒருதிருத்தம் தேவைப்படுகிறது. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்றஅந்த வாசகத்திற்குப் பதிலாக, "இந்தியை என்றும் எதிர்ப்போம்" என்று மாற்றிக் கொள்ளுகிறோம்.

இந்தியை எதிர்த்து போராட்டமுறைகள் அறிவிக்காத காரணத்தினாலே போராட்டம் இல்லை என்று ஆகிவிடாது. முறைகள் அறிவிக்கப்பட வில்லையேதவிர போராட்டம் தொடங்கியாகிவிட்டது.

போராட்டத்தை நாம் போர்க்கருவிகளைக் கையிலே ஏந்தி நடத்துவதாக இருந்தால், தொடங்கப்பட்டு விட்டது போராட்டம் என்று சொன்னவுடன், வாள்கள் மோதும், வேல்கள் ஒன்றோடுஒன்று உராயும்; கவசங்களைக் கணைகள் பிளக்கும்; பிளக்கவருகின்ற கணைகளை கேடயங்கள் தடுக்கும்; இவைகள் எல்லாம் ஆயுதங்கள் ஏந்தி நடைபெறுகிற போராட்டத்தின் காட்சிகள்.

ஆனால் நாம் நடத்த இருக்கின்ற போராட்டம் நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ளுகிற நம்முடைய குருதியைச் சிந்துகின்ற— நம்மைத் தமிழ்மொழிக்குப் பலியிட்டுக் கொள்ளுகிற— தமிழர்களை அடிமைத்தளையிலிருந்து காப்பாற்றுகின்ற ஒரு மாபெரும் அறவழி யுத்தத்திற்கு நாம் தயாராகிறோம்.

இந்தியை மறைமுகமாக எப்படியும் தமிழகத்தில் பரப்பியே தீருவது என்று மத்திய அரசில் உள்ளவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பார்களானால் நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புவது எல்லாம் 1965-ம் ஆண்டை தயவு செய்து மத்தியில் இருப்பவர்கள் மறந்துவிட வேண்டாம்.

அண்ணா அன்றைக்கு விடுத்த ஆணை இன்றைக்கும் எங்களுடைய நெஞ்சில் பசுமையாக நினைவில் இருக்கிறது.

"அரசியல் சட்டத்தைக் கொளுத்து" என்று அண்ணா அவர்கள் அன்றைக்கு ஆணையிட்டார்கள்.

புதியபோர்முறை என்ன, என்ன? என்று கேட்டார்கள். அண்ணா கொடுத்து விட்டுப்போன பழைய ஆயுதமே நம்முடைய கையில் இருக்கும் பொழுது புதிய போர்முறை தேவை இல்லை.

ஆகவே அண்ணா தந்த— அரசியல் சட்டத்தைக் கொளுத்துகின்ற போர் முறையே நாம் மீண்டும் கடைப்பிடிக்கின்ற போர் முறையாக இருக்கலாம்.

இன்னொரு 'மிசா' சட்டம் வரலாம், நாங்கள் இந்தியை எதிர்க்கத் தலைப்பட்டால், இந்தியை எதிர்ப்பதேகூட, அரசியல் சட்டத்திற்கு விரோதம். எப்படி பிரிவினை கேட்பது, அதைப்பற்றிப் பேசுவது பல ஆண்டுகால தண்டனைக்கு உரியதோ, அது எப்படி நாடாளுமன்ற தேர்தல், சட்டமன்றத்தேர்தல்களில் நிற்க முடியாது என்றுதடைப்படுத்தக்கூடிய பெரிய குற்றம் என்று சொல்லப்பட்டதோஅதைப் போல இந்தியை எதிர்ப்பது கூடக்குற்றம்; பல ஆண்டு காலம் தண்டனைகிடைக்கும். நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களுக்கு நிற்க இயலாது என்ற அறிவிப்புக்கள் வருமானால் நான்சொல்கிறேன், பிரிவினையை நாங்கள் வலியுறுத்தினால் அந்தச் சட்டம் எங்களைக்கொத்தும் என்று சொன்ன நேரத்தில் நாங்கள் இந்தியாவின் பாதுகாப்பை மனதில் வைத்து அந்தச்சட்டத்தை ஏற்றுக் கொண்டோம் — பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டோம்.

ஆனால் அதேபோல ஒரு சட்டத்தை இந்தியைஎதிர்த்தால் கொண்டு வருவோம் என்று அவர்கள் சொல்வார்களானால் நாங்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்காக பிரிவினையை விட்டுவிட்டதைப் போல இப்பொழுது இந்தி விஷயத்தில் ஏற்றுக்கொள்ளத்தயாராக இல்லை.

நாங்கள் இந்தியை எதிர்ப்போம். நாடாளுமன்றத் தேர்தலில் நிற்கமுடியாது என்றால் அதைப்பற்றிக் கவலையில்லை. சட்டமன்றத் தேர்தலில் நிற்க முடியாது என்றால் அதைப்பற்றிக் கவலையில்லை.

நீங்கள் அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்து எங்களை வாட்டுவீர்களானால் எங்களைத் தூண்டுவீர்களானால் பிறகு நாடாளுமன்ற மன்றத் தேர்தலுக்கு தேர்தல் அதிகாரி டில்லியில் இருக்கமாட்டார்; தமிழ் நாட்டில் இருப்பார். அப்படிப்பட்ட நிலைமை வராது என்று எதிர்பார்க்கிறேன். அதை வரவிடமாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன். எனவேதான் மத்திய சர்க்காருக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

—இவ்வாறு ஈரோட்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய தி.மு.க. தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

## தார்மீகச் சாமி...

—1-ம் பக்கத் தொடர்

யென்றும் திரு. விஜயரத்தின பண்டார ஆணைக்குழு முன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாணவர்களுக்கு அதிக அளவான பல்கலைக் கழக அனுமதிகள் அளிப்பதனைக் குறைத்து, சிங்கள மாணவர்களுக்கு கூடிய அளவு பல்கலைக்கழக அனுமதிவழங்கவே தரப்படுத்தல் முறை மேற்கொள்ளப் படுகிறதென்றும், தரப்படுத்தல் முறையை நீக்குவது சிங்களமாணவர்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்துமென்றும் திரு. பண்டார ஆணைக்குழுமுன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக வைத்திய மருத்துவ பீடங்களுக்கு 1970ம் ஆண்டு அனுமதி பெறவேண்டுமானால் தமிழ் மாணவர்கள் 250 புள்ளிகளையும், சிங்கள மாணவர்கள் 229 புள்ளிகளையும் அதே ஆண்டில் பொறியியல்பீடத்துக்கு அனுமதிபெறவேண்டுமானால் தமிழ் மாணவர்கள் 232 புள்ளிகளையும், சிங்கள மாணவர்கள் 212 புள்ளிகளையும் பெறவேண்டியிருந்தது என்பதையும், திரு. பண்டார ஆணைக்குழுமுன் ஒப்புக்கொண்டார்.

1970ம் ஆண்டு சிங்கள மாணவர் 112பேரும், தமிழ் மாணவர் 112பேரும் மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்; ஆனால் தரப்படுத்தலின் காரணமாக 1974ம் ஆண்டு சிங்கள மாணவரின் தொகை 180 ஆக அதிகரிக்க, தமிழ் மாணவரின் தொகை 74 ஆகக் குறைந்தது. பின்னர் 219 ஆக சிங்கள மாணவரின் தொகை அதிகரிக்க, தமிழ் மாணவரின் தொகை 49 ஆகக் குறைந்தது என்று சட்டத்தரணி கணமுகலிங்கத்தின் கேள்விக்குப்பதிலளித்த திரு. பண்டார கூறினார்.

பல்கலைக்கழகப் பதிவாளரின் இந்த வாக்குமூலம்— தரப்படுத்தலை தாம் நீக்கிவிட்டதாக தமிழ் மக்கள் முன்னிலையில் ஜே. ஆர். ஆட்சி இதுவரை ஆடிவந்த கபடநாடகத்தை அம்பலப்படுத்தி விட்டதாக மக்கள் பேசிக்கொள்ளுகின்றனர்.

## அதிகாரமின்றி—

—1-ம் பக்கத் தொடர்

அதற்கு பொலிசாருக்கு" தேடுதல் உத்தரவு" (SEARCH WARRANT) இருக்கவேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்தில் பல வீடுகளில் பொலிசார் "சேர்ச் வாரண்ட்" இல்லாமலேயே வீடுகளில் இரவு நேரங்களில் புகுந்து வீடுகளை சோதனையிடுவதாகத் தெரிகிறது. அண்மையில் நடைபெற்ற விமான எரிப்புசம்பவத்தின் பின்னர் பொலிசாரின்இந்த அட்டகாசம் அதிகரித்துள்ளதாம். இதனால் பொதுமக்கள் மிகுந்த தொல்லையடைகின்றனர்.

இதே போல தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் போன்ற இளைஞர் அமைப்புக்களைச் சேர்ந்த இளைஞர்களும் ஏராளமானோர் நாள்தோறும் விசாரணைக்குஅழைத்துச் செல்லப்பட்டு இவர்களிடமிருந்து வாக்குமூலம்பெறப்பட்டு வருகிறது. த.இ. பேரவை உடுப்பிட்டித் தொகுதிஅமைப்பாளர் திரு. செந்துராசா, த.ஈ.வி.இ. தலைவர் முத்துக் குமாரசாமி, ஆகியோர் சென்ற வாரம் விசாரணை செய்யப் பட்டனர்.

திரு. நித்தியானந்தன் என்ற இளைஞரைத் தேடி அவரது திருமண வரவேற்பு நாளன்றே பொலிசார் அவரது வீட்டுக்கு சென்றனர் களாம்.

## அண்ணா பற்றிய கவிதை மலர்

பேரறிஞர் அண்ணா அவர்கள்பற்றி இதுவரை இலங்கையிலுள்ள தமிழ்ப்பத்திரிகைகளில் வெளிவந்த கவிதைகள் அனைத்தையும்ஒன்று சேர்த்து ஒரு நூல் வடிவில் "கவிஞர்நெஞ்சில் காஞ்சி மகான்" என்ற பெயரில் வெளியிட கல்முனைக் கலைக்கொழுந்தன்ஏற்பாடுசெய்து வருகிறார். ஈழத்துக்கவிஞர்கள். அண்ணாவைப்பற்றிப் பாடி பத்திரிகையில்இதுவரை வெளியான கவிதைகளை பிரசுரமான ஆண்டு, மாதம், திகதி பிரசுரமான பத்திரிகையின் பெயர்இப்படியான தகவல்களுடன், "நீர்வாசஅனுவலகம், "பொதுமக்கள் பூமி" சிங்கம்ஸ் சுன் முனை" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கல்முனைக் கலைக்கொழுந்தன் கேட்டுக்கொள்ளுகிறார்.

## ஐயோ தேவநாயகமே!

"மத்திய அரசுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் தவிர ஏனைய தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் இனி சிங்களம் படிக்க வேண்டிய அவசியமில்லை.

—சந்தாறுமூலையில் கே. டபிள்யூ. தேவநாயகம்

(ஆதாரம். 6-9-78 வீரகேசரி)

## சிங்களத் தேர்ச்சியில்லை; 35 பேரின் பதவி பறிபோனது!

தமிழ்பேசும் விவசாய விசாலிப்பு சேவையாளர்களில் மேலும் 8 பேர் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தமிழ்பேசும் விவசாய விசாலிப்பு சேவையாளர்கள் சிங்களத்தேர்ச்சிப்பரீட்சையில் சித்தியடையத்தவறியமையால் ஏற்கனவே 27பேர்வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தனர். தற்போது மேலும் 8பேருக்கு வேலை நீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆதாரம்: வீரகேசரி 5.9.78)

## கட்டாய சிங்கள...

—1-ம் பக்கத் தொடர்

பிரதேசத்தில் சிங்களத்தையும் அரசோச்சச் செய்யும் கட்டளைதான்! ஆம், வவுனியா, திருகோணமலை ஆகிய தமிழ் வழங்கும் பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களிலும், சிங்களக்குடியேற்றத்தினால் அபகரிக்கப்பட்ட அம்பாறை பிரதேச நீதிமன்றங்களிலும், சிங்களத்துக்குமுடிசூட்டும் உத்தரவை அமைச்சர் அனுப்பிவைத்திருக்கிறார்.

திருகோணமலை, வவுனியா, அம்பாறை ஆகிய பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களின் பதிவேடுகள் உத்தியோக மொழியான சிங்களத்திலும் கட்டாயமாக வைக்கப்பட வேண்டுமென்றும் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளும் உத்தியோக மொழியான சிங்களத்திலும் கட்டாயமாக நடைபெற வேண்டுமென்றும் மந்திரி சபையின் ஆலோசனையோடு அமைச்சர் [illegible] தான் அவரது முதலாவது சாதனை"!

தெற்கில் தமிழர் அதிகமாக வாழும் பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களுக்கு பதிவேடுகள் தமிழிலும் வைக்கப்பட வேண்டுமென்றும், நடவடிக்கைகள் தமிழிலும் நடைபெற வேண்டுமென்றும் உத்தரவு ஏதும் அனுப்பப்படவில்லை! ஆனால் தமிழ் பிரதேசத்து நீதிமன்றங்களுக்கு மட்டும்சிங்களம் கட்டாயமாகத் தமிழ் அமைச்சராலேயே திணிக்கப்படுகிறது!

சிங்களம்மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட்டுள்ளதன் விளைவு இது! புதிய அரசியலமைப்பு தமிழர் உரிமைகளுக்கும், தனித்துவத்துக்கும் குழிதோண்டுகிறது என்பதை இது உணர்த்தவில்லையா?

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மனோகராதேவி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org